வருவாய் நிர்வாகம்
பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை

அனுப்புநர்
முதன்மைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

கடித எண். பணி 5(1) / 17494 / 2017, நாள் 12.02.2018

அய்யா,

பொருள்: கிராம நிருவாகம் – கிராம நிருவாக அலுவலர்களின் தகுதிகாண் பருவம் விளம்புகை – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசு கடித எண். 36150 / பணி 7(1) / 2017–2, நாள் 22.11.2017.

------

பார்வையில் காணும் அரசு கடிதத்தின் மீது தங்களது கவனத்தினை ஈர்க்க விழைகிறேன்.

2) கிராம நிருவாக அலுவலர்களுக்கு தகுதிகாண் பருவம் விளம்புகை செய்வது தொடர்பாக மாவட்ட வருவாய் அலகிலிருந்து முன்மொழிவுகள் இவ்வலுவலகத்திற்கு வந்தவண்ணம் உள்ளன. மேற்படி வரப்பெற்ற முன்மொழிவுகளை பரிசீலனை செய்யும் போது விதிகளை தளர்வு செய்யும் அவசியம் இல்லாத, நியமன அலுவலர் நிலையிலேயே தகுதிகாண் பருவம் விளம்புகை செய்யக்கூடிய முன்மொழிவுகளும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

3) இந்நேர்வில், பார்வையில் காணும் அரசு கடித எண். 36150 / பணி 7(1) / 2017–2, நாள் 22.11.2017–ல், கிராம நிருவாக அலுவலர்களின் தகுதிகாண் பருவம் விளம்புகை தொடர்பாக, தனியர்கள் ஐந்து வருட காலத்திற்குள் வரையறுக்கப்பட்ட சிறப்பு தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்கள் தேர்ச்சி பெறும் நாளினை அடிப்படையாகக் கொண்டு தகுதிகாண் பருவம் விளம்புகை செய்ய வேண்டிய இனங்களில் சம்மந்தப்பட்ட நியமன அலுவலரே தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14 / 2016) பிரிவு 33–ன்படி தகுதிகாண் பருவத்தினை நீட்டித்தும் மற்றும் விளம்பி ஆணைகள் வெளியிடவும் நடவடிக்கை எடுக்குமாறு தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4) எனவே, பார்வையில் காணும் அரசு கடிதத்தில் அறிவுறுத்தியவாறு, சம்மந்தப்பட்ட நியமன அலுவலரான வருவாய் கோட்டாட்சியர் நிலையிலேயே கிராம நிருவாக அலுவலர்களுக்கு தகுதிகாண் பருவம் விளம்புகை செய்து ஆணைகள் வெளியிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும், மேற்படி தகுதிகாண் பருவம் விளம்புகை குறித்த இனங்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பத் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/– எம். லக்ஷ்மி
இணை ஆணையர் (வநி)
முதன்மைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையருக்காக.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்